1994 ஏப்ரல் 26] [பேராசிரியர். க. பொன்னுசாமி]

தலைமை ஆசிரியர்கள் பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி *28-3-1994* முதல் *30-3-1994* வரை *3* நாட்களுக்கு அமைதியாக பள்ளிக் கல்வி இயக்கக வளாகத்தின் முன்னால் உண்ணாவிரதம் இருந்தார்கள். பின்னர் அவர்களது கோரிக்கைகள் பள்ளிக் கல்வி இயக்குநர் அவர்களாலும், அரசின் மட்டத்திலும் பல்வேறு வகைகளில் பரிசீலிக்கப்பட்டு, அவர்களுடைய முக்கிய கோரிக்கையான நான்காவது கோரிக்கை--அதாவது மற்ற ஆசிரியர்களுக்கு வழங்கியதைப்போல ஒரு ஊதிய உயர்விற்கு இணையான தொகையைச் சிறப்பு ஊதியமாக அனைத்து உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்கும் வழங்க வேண்டும் என்பது ஏற்கப்பட்டுள்ளது. மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் தலைமையாசிரியர்களுடைய உணர்வுகளுக்கு மதிப்பளித்து, ரூ. *37* இலட்சத்து *47* ஆயிரம் செலவு ஏற்படும் என்றாலும்கூட, கருணை உள்ளத்தோடும், பெருந்தன்மையோடும், கோரிக்கையை ஏற்றுக்கொண்டார்கள். அது சட்டமன்றத்தில் அறிவிக்கப்பட்டது என்பதையும் குறிப்பிட விரும்புகிறேன். அதைத் தொடர்ந்து ஆசிரியர்கள் இப்போது பணிக்குத் திரும்பி இருக்கிறார்கள். அமைதி நிலவுகிறது. தேர்வுத் தாள் திருத்தும் பணி தொடர்ந்து நடைபெறுகிறது. தமிழ்நாடு மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்கள் சங்கத்தின் மாநிலத் தலைவர் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கு கோரிக்கையை ஏற்றுக்கொண்டதற்காக நன்றி தெரிவித்து தந்தி அனுப்பி இருக்கிறார். நிதி தொடர்பில்லாத பிற கோரிக்கைகளை விரைவில் பரிசீலிக்க வேண்டுமென்று வேண்டுகோள் விடுத்து இருக்கிறார். தற்போது பிரச்சினை எதுவும் இல்லை. மற்ற கோரிக்கைகள் அரசின் பரிசீலனையில் உள்ளன என்பதையும் விரைவில் நடவடிக்கையெடுக்கப்பட்டு கோரிக்கைகளை ஏற்பதற்கு அரசு முயற்சியெடுக்கும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

7. அறிக்கை அளித்தல்.

அரசு உறுதிமொழிக் குழு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசு உறுதிமொழிக் குழுவின் அறிக்கையை அளித்தல். திரு. எஸ். டேனியல்ராஜ், அரசு உறுதிமொழிக் குழுவின் தலைவர்.

திரு. எஸ். டேனியல்ராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, *1993-94* ஆம் ஆண்டிற்கான அரசு உறுதிமொழிக் குழுவின் பதினொன்றாவது அறிக்கையை பேரவைக்கு அளிக்கிறேன்.